DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.77/2021** |
| **Deposition of witness for** | : | **Plaintiff/Defendant** |
| **Serial No. of Witness** | : | **PW.1** |
| **Name** | : | முருகன் |
| **Father's Name** | : | சண்முக கோனார் |
| **Village** | : | மேலமுனைஞ்சிபட்டி என்ற முத்துவீரப்பபுரம் |
| **Taluk** | : | நான்குநேரி தாலுகா |
| **Age** | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 20.02.203.
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு 157/18ன் பிராது மற்றும் 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 மற்றும் 2. அசல் வழக்கு 157/18ல் உள்ள இடைக்கால மனு 1/20ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3. அசல் வழக்கு 157/18ல் உள்ள இடைக்கால மனு 1/20ல் இவ்வழக்கு பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்உரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. அசல் வழக்கு 157/18ல் உள்ள இடைக்கால மனு 1/20ன உள்ள உத்தரவு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. அசல் வழக்கு 157/18ல் உள்ள இடைக்கால மனு 1/20ன் உத்தரவாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6. 1ம் தபசில் சொத்தில் மத்திய அரசு தனி வீடு கழிவறை திட்டத்தின் கீழ் வழங்கிய மாநிய தொகை கனரா வங்கி சேமிப்பு கணக்கின் கீழ் எனது மனைவியின் வங்கி கணக்கில் பெறப்பட்டதை காண்பிக்க எனது மனைவியின் வங்கி கணக்கு புத்தகம் அசல் வா.சா.ஆ.7. தாவா சொத்தின் அமைப்பை காண்பிக்கும் புகைப்படங்கள் எண்ணம் 5 குறுந்தகடுடன் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.8. 16.03.21ல் நான் மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு கைநகல் மற்றும் மனு ரசீது வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10. பிராதுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.